**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110252

1. District மாவட்டம்: Tiruvannamalai PS: காவல்நிலையம் VG AC Tiruvannamalai Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 4/2020 Date: நாள் 03.09.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Section 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை Before 1830 hrs on 08.10.2018
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் on 09.10.2018 at 17.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் O/o Sub-Registrar Vandavasi, Tiruvannamalai District 75 km East.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. T. Krishnamoorthy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Thulasi
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.05.1971 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Inspection cell officer, Vellore and Tiruvannamalai Districts, (g) Address : முகவரி Collectorate, Sathuvachari Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) A1 Tmt. P. Kalpana, Formerly Sub Registrar, Vandavasi now District Registrar, Tindivanam, A2. Tr. S. Hakeem Basha, Formerly Assistant O/o Sub-Registrar Vandavasi now, District Registrar's office Pudukottai, A3 Tmt. K. Kalaivani, formerly office Assistant O/o Sub Registrar Vandavasi now District Registrar's office Cuddalore A4. Tr. B. Elumalai, formerly Cameraman (Private Individual) O/o Sub Registrar Vandavasi.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

The Sheets are Separately Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03/09/2020 ... 18.00 ...

Name: பெயர் R. ARUL PRASAD
Rank: நிலை Inspector of Police ………………..No. எண் ……….
Vigilance and Anti Corruption Tiruvannamalai Detachment

<u>பணிந்தனுப்பப்படுகிறது :</u>

இன்று 03.09.2020-ஆம் தேதி பிற்பகல் 17.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில், கடந்த 08.10.2018-ஆம் தேதி திரு.து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் அவர்கள் தலைமையில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு திடீர் சோதனை தொடர்பாக திரு.து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் கொடுத்த புகார் மனு கடந்த 09.10.2018-ஆம் தேதி பெறப்பட்டது. மேற்படி புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்க எதிரிகள் 1. திருமதி.பா.கல்பனா என்பவருக்கு துறை அனுமதி Vide Letter No.13633/H/2019-2, Dated: 24.12.2019 of Commercial Taxes and Registration (H) Department Secretariat, Chennai-9-இன்படியும், எதிரிகள் 2.திரு.செள.ஹலீம் பாஷா, உதவியாளர், 3. திருமதி.கா.கலைவாணி, அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு துறை அனுமதி Vide Proceedings of Inspector General of Registration Chennai-28 No.45513/V3/2018, Dated: 18.02.2020-இன்படியும் வழக்கு பதிவு செய்ய கடந்த 31.08.2020-ஆம் தேதி வரப்பெற்ற அனுமதி கடிதத்தின் பேரிலும் மற்றும் தனிநபர் எதிரி 4.திரு.பா.ஏழுமலை, முன்னாள் புகைப்படக்கருவி இயக்குபவர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்படுகிறது. மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை.நாள்: 09.10.2018 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் 08.10.2018 அன்று கூட்டு திடீர் ஆய்வு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள். நான் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம், பிறபதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும்

கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் 08.10.2018-ந் தேதி மாலை 1830 மணிக்கு என்னுடைய தலைமையில், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு சார் பதிவாளர் திருமதி.பா.கல்பனா மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது 1) திருமதி.பா.கல்பனா (33/2018), த/பெ பார்த்தீபன் (க/பெ பத்மநாபன்), சார் பதிவாளர் நிலை-1, 2) திரு.சௌ. ஹலீம் பாஷா, (33/2018), த/பெ சௌகத் அலி, உதவியாளர், 3) திருமதி.கா.கலைவாணி (55/2018), க/பெ காசியப்பன், அலுவலக உதவியாளர், 4) செல்வி.வெ.திவ்யா (25/2018), த/பெ வெங்கடேசன், தகவல் தொகுப்பு பணியாளர், 5) திரு. பா. ஏழுமலை (33/2018), த/பெ பாபு, கேமிரா ஆபரேட்டர் ஆகியோரும், டாகுமெண்ட் ரைட்டர் மற்றும் பொது மக்கள் சிலர் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் இருந்தார்கள். பின்னர் நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள், சார் பதிவாளர் திருமதி.பா. கல்பனா அவர்களின் மேஜையில் இருந்த பிளாஸ்டிக் டப்பாவை தணிக்கை செய்ய, அதில் ரூ.9,151/- இருந்தது. அவரிடம் மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்டபோது, அவர் இன்று 28 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு ரூ.8,051/- வசூல் செய்ததாகவும், மீதியிருந்த பணம் ரூ.1,100/- பற்றி கேட்க, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. மேலும், அவர் வைத்திருந்த Hand Bag-ஐ தணிக்கை செய்ய, அதில் ரூ.6,180/- இருந்தது. அவரிடம் மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்டபோது, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, மேற்படி பணம் ரூ.6,180/- + ரூ.1,100/-, ஆக மொத்தம் ரூ.7,280/- கைப்பற்றப்பட்டது. பின்னர் உதவியாளர் திரு. ஹலீம் பாஷா என்பவரின் இருக்கையை தணிக்கை செய்ய, அவரது மேஜையில் இருந்த பிளாஸ்டிக் டப்பாவை தணிக்கை செய்ய, ரூ.4,861/- இருந்தது. அந்த பணத்திற்கான முகாந்திரம் அவரிடம் கேட்க, அவர் ரூ.4,341/- முகாந்திரம் கூறியதால், மீதியிருந்த பணம் ரூ.500/- மற்றும் அவர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டுகளை தணிக்கை செய்ய, அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.700/- இருந்தது. அவரிடம் அந்த பணத்திற்கான முகாந்திரம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் சொல்ல இயலவில்லை. அதனால், அவரிடம் இருந்து முகாந்திரம் கூற இயலாத ரூ.700/- + ரூ.500/-, ஆக மொத்தம் ரூ.1,200/- கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக உதவியாளர் திருமதி.

கலைவாணி என்பவரை உடன் வந்த வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆயவாளர் திருமதி. P. விஜயலட்சுமி அவர்களை கொண்டு தணிக்கை செய்ய, அவரின் பர்ஸில் ரு.2,265/- இருந்தது. அந்த பணத்திற்கான முகாந்திரம் அவரிடம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. அதனால், அவரிடம் இருந்து முகாந்திரம் கூற இயலாத ரு.2,265/- கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக கேமிரா ஆபரேட்டர் திரு. ஏழுமலை என்பவரை தணிக்கை செய்ய, அவரின் பர்ஸில் ரு.6,780/- இருந்தது. அந்த பணத்திற்கான முகாந்திரம் அவரிடம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. அதனால், அவரிடம் இருந்து முகாந்திரம் கூற இயலாத ரு.6,780/- கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக தகவல் தொகுப்பு பணியாளர் செல்வி. திவ்யா என்பவரை தணிக்கை செய்ய, அவரின் ஹேண்ட் பேக்கில் ரு.2,870/- இருந்தது. அந்த பணத்திற்கான முகாந்திரம் அவரிடம் கேட்க, அவர் நகை அடமானம் வைத்ததற்கான சீட்டை காண்பித்து, அதற்கு வட்டி கட்ட தன்னுடைய தந்தை தந்ததாக தக்க முகாந்திரம் கூறியதால், மேற்படி பணம் ரு.2,870/- அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது.

| வ. எண். | அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம் | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் / கைப்பற்றப்பட்ட பணம். |
|---|---|---|---|
| 1. | திருமதி.பா.கல்பனா (33/2018), த/பெ பார்த்தீபன் (க/பெ பத்மநாபன்), சார் பதிவாளர் நிலை-1, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண்: 94860 60131) | ரு.7,280/- | தக்க முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. |
| 2. | திரு.செள. ஹலீம் பாஷா, (33/2018), த/பெ செளகத் அலி, உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண்.72004 45713) | ரு.1,200/- | -do- |
| 3 | திருமதி.கா.கலைவாணி (55/2018), க/பெ காசியப்பன், அலுவலக உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண்.95972 45629) | ரு.2,265/- | -do- |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5. திரு. பா. ஏழுமலை (33/2018), த/பெ பாபு, கேமிரா ஆபரேட்டர், சார் பதிவாளர் அலுவலகம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண்.95000 17520) | ரு.6,780/- | -do- |
| 5 | செல்வி.வெ.திவ்யா (25/2018), த/பெ வெங்கடேசன், தகவல் தொகுப்பு பணியாளர், சார் பதிவாளர் அலுவலகம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண்.90427 40185) | ரு.2,870/- | தக்க முகாந்திரம் கூறியதால் திரும்ப கொடுக்கப்பட்டது |
| | கைப்பற்றப்பட்ட பணம் | ரு.17,525/- | |

பின்னர் அலுவலகத்தின் அனைத்து அறைகளிலும் தணிக்கை செய்யப்பட்டது. அப்போது அலுவலகத்தின் ஓய்வறையில் ஜன்னல் கம்பிக்கும், அதன் மீது சாத்தப்பட்ட ஒரு மரப்பலகைக்கு இடையே ரு.3,500/- கைப்பற்றப்பட்டது. அந்த பணத்தை பற்றி யாருடையது என்று விசாரிக்க, யாரும் உரிமை கோராததால், அந்த பணம் ரு.3,500/- கைப்பற்றப்பட்டது. பின்னர் வந்தவாசி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்த டாகுமெண்ட் ரைட்டர் மற்றும் பொது மக்களை தணிக்கை செய்யப்பட்டது.

| வ. எண். | பொது மக்கள் (பெயர் மற்றும் விலாசம்) | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் / கைப்பற்றப்பட்ட பணம். |
|---|---|---|---|
| 1. | திரு. வினோத் (32/2018), த/பெ முரளி, எண்.192, அச்சரப்பாக்கம் ரோடு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.99432 55514) | ரு.1,610/- | தக்க முகாந்திரம் கூறாததால், கைப்பற்றப்பட்டது |
| 2. | திரு. முனுசாமி (42/2018), த/பெ வீரராகவன், எண்.2/94, மேட்டுத்தெரு, = ரங்கராஜீலு கிராமம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.97515 56514) | ரு.900/- | தக்க முகாந்திரம் கூறியதால், திருப்பி கொடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு. புண்ணியக்கோடி (40/2018), த/பெ கண்ணன், எண்.43/10, சன்னதி புதிய தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.(கைபேசி எண்.97862 13672) | ரு.330/- | -do- |
| 4. | திரு. நக்கீரன் (56/2018), த/பெ சுப்பிரமணியம், வழக்கறிஞர், எண்.5, ராம அய்யர் தெரு, முதல் மாடி, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.94430 36485) | Nil | Nil |
| 5. | திரு. K. வெங்கடேசன் (66/2018), த/பெ குப்புசாமி, எண்.33, புதிய தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.94423 11311) | ரு.35,000/- | தக்க முகாந்திரம் கூறாததால், கைப்பற்றப்பட்டது. |
| 6. | திரு. S. கார்த்திகேயன் (46/2018), த/பெ கோவிந்தசாமி, எண்.5, சன்னதி தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.86829 22669) (டாகுமெண்ட் எழுத்தரின் உதவியாளர்) | ரு.42,871/- | -do- |
| 7. | திரு. S. பிரபாகரன் (43/2018), த/பெ சபாபதி, எண்.3, மேலாண்டை தெரு, புரிசை கிராமம், செய்யாறு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.99659 37698) (டாகுமெண்ட் ரைட்டர்) | ரு.650/- | -do- |
| 8. | திரு. M. அமல்ராஜ் (40/2018), த/பெ முடியப்பன், எண்.150B, மைக்கேல்புரம், மழுவங்கரணை, வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.88259 95318) (பைனான்ஸ் வசூல் செய்பவர்) | ரு.26,580/- | தக்க முகாந்திரம் கூறியதால், திருப்பி கொடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 9. | திரு. S. திருமலை (49/2018), த/பெ சக்கரவர்த்தி நாயக்கர், எண்.36A, திருவள்ளுவர் தெரு, அப்பாவு நகர், ஓரிக்கை, காஞ்சிபுரம் மாவட்டம். (கைபேசி எண்.87546 38401) (பத்திரப்பதிவு செய்ய வந்தவர்) | ரு.1,890/- | -do- |
| 10. | திருமதி. செந்தாமரை (45/2018), க/பெ திருமலை, எண்.36A, திருவள்ளுவர் தெரு, அப்பாவு நகர், ஓரிக்கை, காஞ்சிபுரம் மாவட்டம். (கைபேசி எண்.87546 38401) (பத்திரப்பதிவு செய்ய வந்தவர்) | Nil | Nil |
| 11. | திருமதி. ஹேமலதா பிரியதர்ஷினி (33/2018), க/பெ அமிர்தராஜ், எண்.1/1629, சுந்தரவடிவேல் நகர், போரூர், சென்னை (கைபேசி எண்.80561 29202) (பத்திரப்பதிவு செய்ய வந்தவர்) | Nil | Nil |
| 12. | திருமதி. மணிமேகலை (60/2018), க/பெ ஜெயசசந்திரன், எண்.48/A, மாணிக்க வாசகர் தெரு, ஓரிக்கை, காஞ்சிபுரம் மாவட்டம் (கைபேசி எண்.93812 90568) (டாகுமெண்ட் ரைட்டர்) | ரு.4,550/- | தக்க முகாந்திரம் கூறாததால், கைப்பற்றப்பட்டது. |
| 13. | திருமதி. அமலா (40/2018), க/பெ அமல்ராஜ், எண்.150B, மைக்கேல்புரம், மழுவுங்கரணை, வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.87604 28378) (டாகுமெண்ட் டைப்பிஸ்ட் உதவியாளர்) | ரு.2,200/- | தக்க முகாந்திரம் கூறாததால் பணம் கைப்பற்றப்பட்டது. |
| | கைப்பற்றப்பட்ட பணம் | ரு.86,881/- | |

பின்னர் சார் பதிவாளர் திருமதி. கல்பனா அவர்களிடம் சார் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, அவர் எடுத்து ஆஜர் செய்தார். அது அக்டோபர் 08-ம்தேதி 2018 பார்வையிட, அதில் சார்

பதிவாளர் திருமதி. கல்பனா மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி. கலைவாணி ஆகியோர் மட்டும் கையெழுத்திட்டு இருந்தனர். பின்னர் உதவியாளர் திரு. ஹலீம் பாஷா என்பவரை வருகைப்பதிவேட்டில் கையெழுத்திடாதது குறித்து கேட்க, அவர் மறந்துவிட்டதாக சொன்னார். அதில் நான், சார் பதிவாளர் திருமதி. கல்பனா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் "அ" பதிவேட்டை சார் பதிவாளர் திருமதி. கல்பனா அவர்களிடம் கேட்க, அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். அதில் பக்கம்-165 வரை எழுதப்பட்டுள்ளது. அதன கடைசிப்பதிவாக 3200, பத்திரப்பதிவு - அடமானம், பத்திர மதிப்பு ரூ.2,00,000/- என இருந்தது. மொத்தம் என்று எழுதப்பட்டு, கணக்கிடப்படாமல் விடப்பட்டுள்ளது. அதில் நான், சார் பதிவாளர் திருமதி. கல்பனா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்தோம். மேலும், ஆன் லைனில் 08.10.2018-ம்தேதியன்று பதிவு செய்யப்பட்ட பத்திரப்பதிவு விவரங்களை சார் பதிவாளரிடம் கேட்க, அவர் ஆஜர் செய்தார். அதில் நான், சார் பதிவாளர் திருமதி. கல்பனா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் இருப்புத்தொகை குறித்த பதிவேட்டை சார் பதிவாளர் திருமதி. கல்பனா அவர்களிடம் கேட்க, அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 08.10.2018-ம்தேதியன்று சார் பதிவாளர் திருமதி. கல்பனா, செல்வி. திவ்யா, அலுவலக உதவியாளர் திருமதி. கலைவாணி ஆகியோர் அவரச கதியில் அடித்தலும், திருத்தலுமாக எழுதி ஆஜர் செய்துள்ளனர். இது குறித்து, அலுவலக உதவியாளர் திருமதி. கலைவாணி என்பவரிம் விசாரிக்க, அவர் மேற்படி ஆவணத்தை கேட்கும்போது, சார் பதிவாளரும், தானும், செல்வி. திவ்யா என்பவரும் அவசர அவசரமாக அதிகமான தொகையை எழுதி கொடுத்துவிட்டதாக சொன்னார். மேலும், இது குறித்து சார் பதிவாளரிடம் கேட்க, அவரால் ஏதும் கூறஇயலவில்லை. அந்த ஆவணத்தில் நான், சார் பதிவாளர் திருமதி. கல்பனா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் 'D' Account-யை கேட்க சார்பதிவாளர் அவர்கள் ஆன்லைனில் பதிவு செய்யப்பட்ட 'D' Account-யை எடுத்து ஆஜர் செய்தார். ஆதில் நான், சார் பதிவாளர் திருமதி. கல்பனா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. பின்னர் 1) இருப்பு தொகை குறித்த பதிவேடு, 2) வருகை பதிவேடு, 3) "அ" பதிவேடு, 4) பத்திரப்பதிவை ஆன் லைனில் செய்யப்பட்டதின் விவரம் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும், அலுவலக ஊழியர்களிமிருந்து தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.

ரு.17,525/-, அலுவலகத்தில் இருந்த தனி நபர்களிடம் இருந்து அவர்களால் தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரு.86,881/- மற்றும் யாரும் உரிமை கோராத பணம் ரு.3,500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் கையூட்டு என்று கருதப்படும் சந்தேகத்திற்கிடமான ரொக்கம் ரு.1,07,906/-யை இருதுறை திடீர்சோதனையில் கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டு திடீர் சோதனை 08.10.2018-ம் தேதி இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இன்று 09.10.2018-ல் பிற்பகல் 1700 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டதில் கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரு.1,07,906/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேற்கொண்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். SdXXXXX 9.10.18 (து.கிருஷ்ணமூர்த்தி) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

ஐயா, மேற்கண்ட புகார் மனுவின் பேரில் சம்மந்தப்பட்ட எதிரிகளின் துறை அலுவலர்களின் முன்அனுமதி பெற்று இன்று 03.09.2020-ஆம் தேதி 17.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2020 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018-இன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல், மகஜர் மற்றும் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி திருவண்ணாமலை அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

03/09/2020.

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவண்ணாமலை.